**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் நாள் திங்கட்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 09ஆம் நாள்**

**இடை மனு எண்.01/2025**

**In**

**அசல் வழக்கு எண்.110/2025**

[CNR.No.TNDG190002932025]

K.செல்வம் .... மனுதாரர்/வாதி

// எதிராக //

C.இளங்கோவன் ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இந்த மனுவானது கடந்த 10.06.2025 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 13.06.2025 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என்முன்பு இறுதியாக கடந்த 11.08.2025 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.சையதுஇப்ராஹிம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, சார்வு செய்யப்பட்டு, முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 15.07.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டு, மனு, பிரமாண பத்திரிக்கை, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் :

**உத்தரவு**

எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு அட்டவணை சொத்துக்களை தீர்ப்புக்கு முன் உடன் பற்றுகை செய்து உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 38, விதி 5 மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியிடம் கடன் தொகை ரூ.8,15,000/- பெற வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியிடம் மட்டும் அல்லாமல் இன்னும் பல நபர்களிடம் கடன் பெற்றுக்கொண்டு பல பிராமிசரி நோட்டுக்கள் எழுதிக்கொடுத்துள்ளார். அவர்களும் கடன் தொகையை திருப்பி செலுத்தும்படி நிர்பந்தம் செய்வதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்கிரையம் செய்து விட்டு நிரந்தரமாக வெளியூர் சென்றுவிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். அவ்வாறு செய்து விட்டால் மனுதாரருக்கு அவரது கடனை பிரதிவாதியிடமிருந்து வசூல் செய்ய இயலாது. எனவே, எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்தை தீர்ப்புக்கு முன்பாகவே தாவா சொத்துக்களை பற்றுகை செய்ய வேண்டியது அவசியமாகும் என்று மனுதாரர் /வாதியால் இம்மனுவானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

**2.** எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 15.07.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**4. பிரச்சனைக்கான தீர்வு:**

**4.1** அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடனுறுதிசீட்டின் பேரில் பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய மனுதாரர்/வாதியால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அசல் வழக்கிலும், இம்மனுவிலும் அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிரதிவாதி இந்நீதிமன்றத்தில்

முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 15.07.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும், மணியன் என்கிற மணி ஆகிய இருவருக்கும் மாரியாயி, தங்கமணி, வளர்மதி, லதா ஆகியோர்கள் கடந்த 15.12.2022ம் தேதி எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தின்படி மனு சொத்துக்கள் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களின் வழியாக அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்களின் தன்மைப்படி நாளது தேதி வரை மனு சொத்துக்கள் முழுவதும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

**4.2.** மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடும் போது, மனு சொத்துக்களை பொறுத்து எவ்வித வில்லங்கமும் இல்லை என்றும், அசல் வழக்கானது 10.06.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு சொத்துக்களை விற்பனை செய்ய போவதாகவும், 3ம் நபரான ஒரு K.முருகானந்தம் என்பவர் இந்நீதிமன்றத்தில் பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், சொத்தினை விற்பனை செய்து விட்டால், தாவா கடனுறுதிச்சீட்டிற்குண்டான தொகையினை எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் இருந்து வசூல் செய்ய முடியாது என்றும், எனவே, தீர்ப்புக்கு முன்பாகவே மனு சொத்துக்களை பற்றுகை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**4.3.** அசல் வழக்கு மற்றும் இம்மனுவை பொறுத்து நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் ஒருதலைபட்சநிலைக்குட்படுத்தப்பட்டுள்ளார். மேலும், மனு சொத்துக்களானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தின் வழியாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களின் வழியாக அறிய முடிகிறது. மனு சொத்துக்களை

பொறுத்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி விற்பனை செய்ய உள்ளார் என்பதை 3ம் நபர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கை வாயிலாக அறிய முடிகிறது. இந்நிலையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு சொத்துக்கள் முழுவதையும் அல்லது பகுதி எதனையும் விற்பனை செய்யவோ அல்லது உரிமை மாற்றம் செய்ய உள்ளார் என்பதை பொறுத்து மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிசீட்டிற்குண்டான தொகையை பொறுத்து நாளது வரை எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பிணையம் எதுவும் கொடுக்கவில்லை. தாவா கடனுறுதிசீட்டானது தொகை ரூ.6,00,000/- என குறிப்பிட்டுள்ள நிலையில், வழக்குரை தாக்கல் செய்துள்ள நாள் வரை கொடுபடவேண்டிய தொகை ரூ.8,15,600/- உள்ளது. இந்நிலையில், மனு சொத்துக்கள் ரூ.17,13,000/- மதிப்பு என்று ம.சா.ஆ.2 வில்லங்கசான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4.4.** இம்மனுவின் அனைத்து சூழ்நிலைகளையும் ஒருங்கியல்பாக பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனு சொத்துக்களை விற்பனை செய்ய உள்ளார் என்பது 3ம் நபர் பிரமாணப்பத்திரிக்கை வழியாக அறியக்கூடிய நிலையிலும், கடனுறுதிச்சீட்டிற்குண்டான தொகைக்கு பொறுப்புறுதியோ, பிணையமோ, இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாத நிலையில், மனு சொத்துக்களை பொறுத்து தீர்ப்புக்கு முன்பாகவே பற்றுகை செய்ய உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**4.5.** அசல் வழக்கு கடனுறுதிசீட்டின்பேரில் தாக்கல் செய்துள்ள நிலையில், நாளது வரை கடனுறுதிசீட்டிற்குண்டான தொகையினை பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்ட பின்னரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி தகுந்த பிணையம் வழங்காத நிலையில், மனுதாரர்/வாதிக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் வீண் காலநேரம் விரையமும், வீண் செலவுகளும்

ஏற்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு, எதிர்மனுதாரர்/பிரதிவாதி உரிய செலவு தொகையை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடுவதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**5. முடிவில்,**

**மனு சொத்துக்களை பற்றுகை செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 12.09.2025. (படி மெமோ செலுத்த 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படுகிறது)**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 25ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.25 03:30:33 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**மனுதாரர் /வாதி தரப்பு சாட்சிகள்** : இல்லை.

**மனுதாரர் /வாதி தரப்பு சான்றாவணங்கள்** :

| | | | |
|---|---|---|---|
| 1 | 15.12.2022 | எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும், மணியன் என்கிற மணி ஆகிய இருவருக்கும் மாரியாயி, தங்கமணி, வளர்மதி, லதா ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த பாகபாத்தியவிடுதலைப்பத்திரம் – நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | 06.06.2025 | மனு சொத்துக்களுக்கான வில்லங்கசான்றிதழ் | கணினி நகல் |

**எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
**எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**